**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **1-6-2015**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மாணவர்களின் நலனுக்காக**

**வேளாண் பல்கலைக்கழகம் தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. இராமசாமி அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சென்னையில் இயங்கி வரும் ஓரியண்ட் க்ரீன் பவர் தொழில் நிறுவனத்துடன் மாணவர்களின் நலன் கருதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. ஒப்பந்தத்தில் பதிவாளர் கு.ரா. ஆனந்தகுமார் அவர்களும் நிறுவனத்தின் சார்பில் அந்நிறுவனத்தின் முதுநிலைத் துணைத் தலைவர் திரு. R. குலோத்துங்கன் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இதன் மூலம் பி.டெக்., (எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்) படிக்கும் மாணவர்கள் பயிலும் போதே பயிற்சியின் மூலம் தொழில் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், திறமையான மாணவர்களுக்குத் தேவையான ஆய்வு ஊக்கத்தொகை வழங்குவதற்கும் மற்றும் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கும் இவ்வொப்பந்தம் வழிவகை செய்யும். மேலும் இந்நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் புதிய ஆய்வுகளில் ஈடுபடும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர். திவாக்கர் துரைராஜ் அவர்களும் மற்றும் கரிம எரிசக்தி துறை தலைவர் முனைவர். புகழேந்தி அவர்களும் கலந்து கொண்டனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்